2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

158—

குடமுழுக்கு

***7524—திரு. சீ. கதிரவன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி வட்டம், துளையானத்தம் ஊராட்சி, ஜெம்புநாதபுரம் அருள்மிகு ஸ்ரீபாலதண்டாயுதபாணி திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஜெம்புநாதபுரம், அருள்மிகு பாலதண்டாயுதபாணி திருக்கோயில் என்பது, சட்டப்பிரிவு 49 (1)-ன்கீழ் பட்டியலைச் சாராத திருக்கோயிலாகும். இந்தத் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெற்று 20 ஆண்டுகள் ஆகியிருக்கின்ற நிலையில், தொல்லியல் வல்லுநர் குழு, மண்டல வல்லுநர் குழு மற்றும் மாநில வல்லுநர் குழு ஆகிய 3 குழுக்களினுடைய ஒப்புதல் பெற்று, ரூபாய் 10 இலட்சம் செலவில், உபயதாரர் நிதியோடு வெகுவிரைவில் குடமுழுக்குக்குண்டான திருப்பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தியாகராஜன் அவர்கள்.*

திரு. ந. தியாகராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முடித்துவிடட்டும்.*

[2023 ஏப்ரல் 13

திரு. ந. தியாகராஜன்: தெய்வங்கள் போற்றும், தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சரை வணங்கி, மண்ணச்சநல்லூர் தொகுதி, முசிறி வட்டம், துளையாநத்தம் ஊராட்சி, ஜெம்புநாதபுரம் அருள்மிகு பாலதண்டாயுதபாணி திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

அதைப்போல, திருச்சி இணை ஆணையர் மண்டலத்தில், 4-12-2022 மற்றும் 23-2-2023 ஆகிய தேதிகளில் 27 இளைஞர்களுக்கு, திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான பெருந்திட்ட வளாக மாரியம்மன் திருமண மண்டபத்தில், நமது மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் கட்டணமில்லா திருமணங்கள் சிறப்பாக நடைபெற்றன. (மேசையைத் தட்டும் ஒலி) பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள பெரும்பாலான பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க, மீண்டும் திருக்கோயில்களில் திருமணம் நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், பிச்சாண்டார் கோயில், அருள்மிகு உத்தமர்திருக்கோயிலில் பழுதடைந்த தேரினைச் சீரமைத்துத் தேரோட்டம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், சுனைபுதுநல்லூர் அருள்மிகு மீனாட்சி உடனுறை சுந்தரேஸ்வரர் திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் ஒரு நிமிடம் உட்காருங்கள். கொறடா அவர்கள், அவை முன்னவரிடம் ஏதோ கேட்கிறேன் என்கிறார்கள். (குறுக்கீடு) அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போதும் நான்தான் வாய்ப்பு தந்திருக்கிறேன். (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்லட்டும். இது முடியட்டும். நாம் பேசிக்கொள்வோம். (குறுக்கீடு) அதை எடுத்து விடுகிறேன், எடுத்து விடுகிறேன். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு பேர் சொன்னதையும் எடுத்து விடுகிறேன். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு முன்னவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்களைப் பற்றிச் சொன்னதையும், நீங்கள் பேசியதையும் எல்லாவற்றையும் நீக்கி விடுகிறேன். இது கேள்வி நேரம். கேள்வி, பதில் மட்டும் இருக்கட்டும். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தியாகராஜன் கேள்வியை கேட்பார் என்று பார்த்தால், மானியக்கோரிக்கைபோல், நீண்ட, நெடிய நான்கு கேள்விகளை கேட்டு அமர்ந்திருக்கிறார்கள். அருள்மிகு மீனாட்சி உடனுறை சுந்தரேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கு தொல்லியல் குழு, மண்டலக் குழு மற்றும் மாநிலக் குழு ஆகிய மூன்று குழுக்களினுடைய அனுமதி பெற்று, ரூபாய் 10 இலட்சம் செலவில் உபயதாரர் நிதியில், வருகின்ற 23-4-2023 அன்று கும்பாபிஷேகம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நம்முடைய சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகமும், உத்தமர் கோயிலுக்கு திருத்தேரும் கேட்டார். தற்போது சைவம், வைணவம் இரண்டிற்கும் ஒன்றாக இருக்கும் ஒரு கோயில் உத்தமர்கோயில் ஆகும். சைவமும், வைணவமும் இரண்டு தெய்வங்களும் ஒன்றாக சாமி புறப்பாடு ஆகின்ற அந்தத் திருக்கோயிலினுடைய திருத்தேர் திருப்பணியானது ரூ.55.50 இலட்சம் செலவிலே மேற்கொள்ளப்பட்டு, 90 சதவீதப் பணிகள் தற்போது நிறைவடைந்திருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொரு கேள்வியாக திருக்கோயிலிலே, மாவட்டத்தினுடைய அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன்

[2023 ஏப்ரல் 13

திரு. நேரு அவர்கள், கட்டணமில்லா திருமணங்களை நடத்தி வைத்ததாகச் சொன்னார். இந்தத் திருமணங்கள் கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 500 இணைகளுக்கு கட்டணமில்லா திருமணங்களை ஆண்டுதோறும் நடத்துவேன் என்று அறிவித்ததற்கிணங்க, நடைபெற்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 4 ஆம் தேதி, 31 திருமணங்களை திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில் நடத்தித் தந்தார். அதோடு மட்டுமல்லாமல், அன்றைக்கு ஓர் இணைக்கு ஒரு திருமணத்திற்கு 20,000 ரூபாய் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதை உயர்த்தி, ஓர் இணைக்கு திருக்கோயிலின் சார்பிலே நடைபெறுகின்ற திருமணங்களுக்கு 50,000 ரூபாய் என்று வாரி வழங்கிய முதல்வர் நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தைத் தொடர, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு) மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் . . . (குறுக்கீடு) ஐயா அவர்களை வணங்கி . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள் கேள்வியை மட்டும் சுருக்கமாகக் கேளுங்கள். (குறுக்கீடு) ஒரே கேள்வி, ஒரு நிமிடம், ஒரு second.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட தலைவாசலில் தமிழகத்திலே இரண்டாவது காய்கறி கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகின்றது. இந்த இடம் அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடமாகும். எனவே, அந்த இடத்தில் மழைக்காலங்களிலும், வெயில் காலங்களிலும். . . (குறுக்கீடு)

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது மூலக்கேள்விக்கு தொடர்புடைய கேள்வி இல்லை. இதைத் தனிக் கேள்வியாகக் கேளுங்கள்.*

வினா வரிசை எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

43—

கூடுதல் வகுப்பறைகள்

***58090—திரு. ஈ. பாலசுப்ரமணியன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, மூங்கபாடி மகளிர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, மூங்கபாடி, குகை பகுதியில் நகரவை மகளிர் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் 2,606 மாணவிகள் பயின்று வருகின்றனர். பள்ளியில் 53 வகுப்பறைகள் உள்ளன. கடந்த ஆண்டைவிட மாணவர்கள் சேர்க்கை அதிகரித்த காரணத்தினால், கூடுதலாக 12 வகுப்பறைகள் தேவைப்பட்டன. கூடுதல் வகுப்பறைகள் கட்ட இட வசதியும் பள்ளியில் உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, தற்போது சேலம் மாநகராட்சியுடன் இணைந்து முதற்கட்டமாக 6 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இந்தக் கல்வியாண்டில் அப்பள்ளிக்கு மேலும் 6 வகுப்பறைகள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.*